இருத்தல் வேண்டும். அதிலே அவர்கள் ஏதாவது தகராறு செய்தார்களானால் அதை அரசாங்கத்திற்கு எழுதி அனுப்புவீர்களானால் அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்கவும் வசதியாக இருக்கும் என்பதைக் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9.40)

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கிராமங்களில் சில ஏழைகள் ரோடு ஓரங்களில் வீடு கட்டி, குடிசைகள் அமைத்திருக்கிறார்கள். ஹைவேஸ் இலாக்கா அவர்களை அப்புறப்படுத்த முயற்சி எடுக்கிறார்கள். அப்போது அவர்களுக்கு மாற்று இடம் அரசாங்கம் கொடுத்துவிட்டு, அவர்களை அங்கிருந்து மாற்ற முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கு — நண்பர் ஜேம்ஸ் கேட்ட கேள்விக்கு — நான் அளிக்கின்ற பதில் : இடத்தைப் பொறுத்தது, இடத்தின் தேவையைப் பொறுத்தது. அரசாங்கத்துக்கு எந்த அளவுக்கு அந்த இடம் பயன்படும் என்பதையும் ஒட்டியது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி அரசாங்கத்திற்கு அந்த இடம் தேவை என்ற கட்டாயமான சூழ்நிலை ஏற்படுமேயானால், அதற்கு 'ஆல்டர்னேடிவ் சைட்' கொடுக்க நிச்சயம் அரசாங்கம் தயாராக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஊதியம்.

*23 வினா திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

தஞ்சை மாவட்டத்தில் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விவசாயிகளுக்கு உரிய ஊதியத்தைப் பெற்றுத்தர தனி அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நாகப்பட்டினம், நன்னிலம், திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, மாயூரம், சீர்காழி ஆகிய ஏழு வட்டங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு சமரச அதிகாரி செயற்பட்டு வருகிறார்.

[1977 ஆகஸ்ட் 6

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நிர்ணயிக்கப்பட்ட கூலிகள் தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாகக் கீழ்த் தஞ்சை மாவட்டத்தில், விவசாயிகளுக்குத் தரப்படுவதில்லை. சமரச அதிகாரிகளைக் கண்டுபிடிப்பதே மிகுந்த சிரமமான சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், அதை விரிவுபடுத்தி, விவசாயிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட நியாயமான கூலியை அவர்கள் பெறுவதற்கான வழிமுறைகளை அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, 1969 ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டம், கிழக்கு தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினம், நன்னிலம், திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைபூண்டி, மாயூரம், சீர்காழி ஆகிய 7 வட்டங்களில் அமுலில் இருந்து வருகிறது. மேற்படி சட்டத்தை அமுல்படுத்த, விவசாயிகளுக்கு உரிய ஊதியத்தைப் பெற்றுத்தர, ஒவ்வொரு வட்டத்திற்கும், வட்ட ஆட்சி அலுவலர் நிலையில் ஒரு சமரச அதிகாரியும், அவர்கள் கீழ் பணிபுரிய ஒரு கடைநிலை ஊழியரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கோட்டாட்சி அலுவலர் மேற்பார்வையில் இயங்கி வருகிறார்கள். கீழ்த் தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் நல்ல முறையில் ஆரம்பித்து, பேச்சு வார்த்தை மூலம் நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி இயங்கி வருவதால், மிராசுதார்கள் குறைந்த ஊதியம் கொடுப்பதாக எந்தவிதமான புகாரும் இல்லை. இருந்தபோதிலும் ஊதியத்தை ரொக்கமாகக் கொடுப்பதில் உள்ள தகராறுகள், வெளியிடங்களிலிருந்து தொழிலாளர்களை அழைத்து வந்து வேலைக்கு அமர்த்தல், மற்றும் உள்ளூர் விவசாயத் தொழிலாளர்களை பணியில் அமர்த்த மறுத்தல் ஆகியவைகள் அவ்வப்போது நடைபெறுகின்றன. அவைகளை சமரச அதிகாரிகள், தகராறு நடக்கும் இடங்களைப் பார்வையிட்டு, சமரசப் பேச்சு வார்த்தைகள் மூலம் தகராறுகளைத் தீர்த்து வைக்கிறார்கள். இந்த முறை விவசாயப் பணியைச் சுமுகமாக நடத்த பேருதவியாக இருக்கிறது. இது வரையில் சட்டத்தின் 6 வது பிரிவின் கீழ் நியாய ஊதியம் கேட்டு எந்த மனுவும் வரவில்லை. இருந்த போதிலும் மேற்கூறிய பொதுவான கோரிக்கைகள் சென்ற ஆண்டு 240 வரப் பெற்று, சமரச அதிகாரிகளால் தீர்வு பெறப்பட்டன. இதன் மூலம் 2,293 அரிசனங்களும், 40 மலைசாதியினரும், 551 இதர வகுப்பினரும், ஆக மொத்தம் 2,884 பேர்கள் பலனடைந்திருக்கிறார்கள்.

1977 ஆகஸ்ட் 6]

திரு. கே. சவுந்திரராசன் : தலைவரவர்களே, நிர்ணயிக்கப்பட்ட கூலிகள் கொடுக்காத மிராசுதார்கள் எவ்வளவு பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, என்னிடம் இப்போது தகவல் இல்லை. தெரிந்து சொல்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் திரட்டப்படாத இடங்களில், அதே பிரதேசத்தில் இந்தச் சட்டம் அமுல் நடத்தப்படுவதில்லை. அவர்கள் ஏதாவது சட்டத்தின்படி கூலி கேட்டால் அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி புதிய தொழிலாளர்கள் கொண்டுவரப்படுகிறார்கள். ஆகவே அது மாதிரி சட்டத்தின்படி கூலி கேட்டு அவர்கள் வெளியே அனுப்பப்பட்டு வெளித் தொழிலாளர்களைக் கொண்டு வரும் பொழுது, போலீஸ் வெளித் தொழிலாளர்களை அவர்களே வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது முதற் கேள்வி.

இரண்டாவது, விவசாயத் தொழிற் சங்கப் பிரதிநிதிகளைக் கொண்டு, சமரச அதிகாரியால் மட்டும் பணியாற்ற முடிவதில்லை, விவசாய தொழிற்சங்கங்கள் நல்லமுறையில் பணியாற்றுகிறது என்று நீங்கள் சொல்வதாலும் பல்தரப்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சுங்களது முதற் கேள்விக்குப் பதில், யாராவது சட்டத்தை மீறுவதாக இருந்தால் சட்டம் தனது நடவடிக்கையை மேற்கொள்ளும். இரண்டாவது நீங்கள் சொன்ன யோசனை அரசின் கவனத்தில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, நியாயமான கூலியை கேட்டுத்தான் தாங்கள் கொடுக்க வேண்டும் என்பதில்லை. இன்றைக்குக்கூட மாயூரம் பகுதியில் ஆண்களுக்கு ரூ. 5-ம் பெண்களுக்கு ரூ. 3-ம் என்ற அளவில்தான் கொடுக்கப் படுகிறது ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் முத்தரப்பு மாநாட்டைக் கூட்டி அப்படி நிர்ணயிக்கப்பட்ட கூலி கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்வது வழக்கம். எனவே இந்த

[திரு. எஸ். கணேசன்] [1977 ஆகஸ்ட் 6

அரசு அப்படிப்பட்ட ஆலோசனையை மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நண்பர் உறுப்பினர் கணேசன் சொன்னது பற்றி பரிசீலிக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நியாயமான கூலியைச் சென்ற தேர்தலின்போது மிராசுதார்கள் தங்களைச் சேர்ந்த கட்சிக்காரர்களுக்கு வாக்களித்து ஆதரிக்காத தொழிலாளர்களுக்குக் கூலி இல்லை, வேலை இல்லை என்று விரட்டி அடித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் குறைந்த கூலியும் கொடுத்து இருக்கிறார்கள். இதைப் பற்றி அரசுக்கு ஏதாவது தகவல் உண்டா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இதுவரை அரசுக்கு எந்த விதத் தகவலும் இல்லை. தகவல் வந்தால் கவனிக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் வேளக்குடி கிராமத்தில் வெளியிலிருந்து ஆட்கள் இறக்கப்படுகிறார்கள். அங்குள்ள விவசாயத் தொழிலாளர்கள் வெளியிலிருந்து தொழிலாளர்கள் இறக்கப்படுவது பற்றி போலீசாரிடம் சொன்னால், 42 பேர்கள் மீது 7 வழக்குகள் தொடரப்பட்டிருக்கிறது, வெளியிலிருந்து தொழிலாளர்கள் இறக்கப்படுவதைக் கட்டாயமாகத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது இரண்டு மாதங்களுக்கு முன்பு நடந்திருக்கிறது, இப்போது தண்ணீர் வந்திருக்கும் காரணத்தால் தகராறு வரும். இது தடுத்து நிறுத்தப்படுமா? வழக்குகள் வாபஸ் பெறப்படுமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஏற்கனவே இதுபற்றி கேட்ட கேள்விக்கு எனது பதிலில் நான் குறிப்பிட்டது இப்படிப்பட்ட காரியங்கள் சில இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, கீழ்த் தஞ்சை பகுதியில். அது சரி செய்யப்படுகிற அளவுக்கு அங்கே இயங்குகிற சங்கம் வலுவுள்ளதாக இருப்பதால் அதிகமான அளவுக்கு நடைபெறவில்லை என்று செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட முறை நடக்குமானால்,

1977 ஆகஸ்ட் 6]

நீங்கள் எனது பார்வைக்குக் கொண்டு வருவீர்களேயானால் நிச்சயமாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை கனம் உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மனு நீதித் திட்டம்.

*24 வினா திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மனு நீதித் திட்டம் தற்போது அமுல் நடத்தப்படுகின்றதா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அமுல் படுத்தப்படுகிற திட்டம் தமிழகத்தில் ஆரம்பத்தில் துவக்கப்பட்ட போது இங்கு அது சிறப்பாக நடைபெறுகிறது என்று மற்ற மாநிலங்களில் எல்லாம் பாராட்டுக்கள் தெரிவித்தார்கள். இடைக்காலத்தில் நெருக்கடி நிலை இருந்த பொழுது அந்தத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்று அறியப்படுகிறது. எனவே, நமது புதிய அரசு புதிய முறுக்கோடு அந்தத் திட்டத்தை செயல்படுத்த ஆவன செய்ய முன் வருமா?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இந்தத் திட்டம் அமலில் இருக்கிறது என்று நான் சொன்னேன். ஆனால் இந்தத் திட்டத்தைப் பற்றி சில தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. அது சரியாக இயங்கவில்லை என்ற ஒரு கருத்தும், முறையாக அது செயல்படுத்தப்படவில்லை என்ற கருத்தும் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் ஆய்ந்து பார்த்து எப்படி நடவடிக்கைகள் எடுப்பது என்பது பற்றி அரசு ஆவன செய்யும் என்பதை கனம் உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது இந்த மனு நீதித் திட்டம் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். உண்மைதான். 1967 ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.